# நமது தின கனி

காலை நாளிதழ்

**NAMADHU DHINA KANI** Daily Morning

| Vol : 01 | Issue : 75 | 4 Pages | 17.10.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 75 | 4 பக்கங்கள் | 17.10.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பட்டினி குறியீடு ஆய்வு: ஐரோப்பிய நாடுகளில் பின்பற்றப்படும் அளவுகோல், நமக்கு பொருந்தாது மன்சுக் மாண்டவியா கருத்து



கவுகாத்தி, அக். 17

உலகளாவிய பட்டினி குறியீடு தரவரிசை கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. 125 நாடுகள் கொண்ட பட்டியலில், இந்தியா 111 வதுஇடத்தில்பின்தங்கிஇருந்தது.இந்தியாவில்ஊட்டச்சத்துபற்றாக்குறை இருப்பதாக அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்நிலையில், அசாம் மாநில தலைநகர் கவுகாத்தியில் உள்ள ஐ.ஐ.டி. யில் நேற்று ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய சுகாதாரத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியாவிடம் இதுகுறித்து மாணவர்கள் கேட்டனர். அதற்கு மன்சுக் மாண்டவியா கூறியதாவது:

"ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் உடல், மரபணு கட்டமைப்பு வெவ்வேறாக உள்ளது. ஊட்டச்சத்து பற்றாக்குறையை கணக்கிடும் முறையிலும்மாறுபாடுஇருக்கும்.ஐரோப்பியநாடுகளில்பின்பற்றப்படும் அளவுகோல், நமக்கு பொருந்தாது. அதுபோல், இந்த ஆய்வில் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள், நமது நாட்டுக்கு பொருந்துவதாக இல்லை. இருப்பினும், இதுபற்றி ஆய்வு செய்து வருகிறோம்."

இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.400க்கு கியாஸ் சிலிண்டர்; தலா ரூ.5 லட்சம் காப்பீடு: தேர்தல் அறிக்கையில் சந்திரசேகர ராவ் வாக்குறுதி



ஐதராபாத், அக். 17

தெலுங்கானா சட்டசபை தேர்தல், நவம்பர் 30ந் தேதி நடக்கிறது. இதையொட்டி, அங்கு ஆளுங்கட்சியாக உள்ள பாரத ராஷ்டிர சமிதி, நேற்று தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. கட்சி தலைவரும், முதல் மந்திரியுமான சந்திரசேகர ராவ், தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அதில், ஏராளமான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.வாக்குறுதிகள்குறித்துசந்திரசேகர ராவ் நிருபர்களிடம் கூறியதாவது:

தெலுங்கானாவில் பாரத ராஷ்டிர சமிதி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், தகுதியுள்ள பயனாளிகளுக்கு ரூ.400 விலையில் சமையல் கியாஸ் சிலிண்டர் வழங்கப்படும். மீதி தொகையை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும்.

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள 93 லட்சம் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் காப்பீடு அளிக்கப்படும். அதற்கான பிரீமியம் தொகையை மாநில அரசு செலுத்திவிடும். 'ஆரோக்கிய ஸ்ரீ' திட்டத்தின்கீழ், தகுதியுள்ள பயனாளிகளுக்கு தலா ரூ.5 லட்சம் சுகாதார காப்பீடு அளிக்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூ.15 லட்சமாக உயர்த்தப்படும். சமூக பாதுகாப்பு ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வரும் ரூ.2,016 மாதாந்திர தொகை, 5 ஆண்டுகளில் ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்படும். முதல் ஆண்டிலேயே ரூ.3,016 ஆக அதிகரிக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் தற்போதைய ரூ.4 ஆயிரத்து 16ல் இருந்து 5 ஆண்டுகளில் ரூ.6 ஆயிரத்து 16 ஆக உயர்த்தப்படும்.

விவசாயிகளுக்கான முதலீட்டு பாதுகாப்பு திட்டத்தில், ஒரு ஏக்கருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது. இத்தொகை 5 ஆண்டுகளில் படிப்படியாக ரூ.16 ஆயிரமாக உயர்த்தப்படும். தங்கிப்படிக்கும் ஜூனியர் கல்லூரிகள், பட்டப்படிப்பு கல்லூரிகளாக தரம் உயர்த்தப்படும். நிச்சயமாக மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம். ஆட்சிக்கு வந்த 6 முதல் 7 மாதங்களிலேயே வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். கடந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத 90 சதவீத நலத்திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம். தனிநபர் வருமானம் மற்றும் மின்சார பயன்பாட்டில் முதன்மை மாநிலமாக தெலுங்கானா உருவெடுத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## இதுவரை மொத்தம் 330 பாலஸ்தீனியர்கள் கைது: இஸ்ரேல் பாதுகாப்புப் படை தகவல்



டெல் அவிவ், அக். 17

இஸ்ரேல்ஹமாஸ் இடையேயான போர் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது. இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் காசா நகரம் உருக்குலைந்து வருகிறது. அதேபோல் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது சரமாரியாக ராக்கெட் குண்டுகளை வீசியும், இஸ்ரேல் நகரங்களுக்குள் ஊடுருவியும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் இரு தரப்பிலும் உயிரிழப்பு அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இந்த நிலையில் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை மொத்தம் 330பாலஸ்தீனியர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளதாகஇஸ்ரேல்பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. அவர்களில் 190 பேர் ஹமாஸ் படையினருடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கு கரையில் இஸ்ரேல் படைகள் மற்றும் பாலஸ்தீனியர்கள் இடையே அடிக்கடி மோதல் ஏற்படும் நிலையில், இதுவரை 55 மேற்கு கரை பாலஸ்தீனியர்கள் இஸ்ரேல் ராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



சென்னை, அக். 17

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 27 மீனவர்கள் மற்றும் அவர்களது 5 மீன்பிடிப் படகுகளை விடுவித்திட வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இரு வேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சம்பவம் கவலையை அளிக்கிறது.

தொடர்ச்சியாக இது போன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் மீனவ மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவே உடனடியாக தூதரக அளவிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறி உள்ளார்.

## அரசால் அங்கீகரிக்கப்படாத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டாம்: மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அறிவுரை

திருப்பூர், அக். 17

திருப்பூர் மாவட்டத்தில் தனியார் நிதி நிறுவனம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கானவர்களிடம் பல லட்சம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாமிநாதன் நிருபர்களிடம் கூறியதாவது:

எந்தவித ஆவணங்களும் இல்லாமல் கடன் தருவதாகவும், குறைவான வட்டியில் கடன் தருவதாகவும், முதலீடு செய்தால் அதிக வட்டி தருவதாகவும் பொய்யான விளம்பரத்தை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம். ஆன்லைனில் வேலை வாங்கிதருவதாகவும், பணம் டெபாசிட் செய்தால் இரட்டிப்பு பணம் தருவதாகவும், அதிக வட்டி தருவதாகவும் ஏமாற்றுகிறார்கள். தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் இனிவரும் காலங்களில் இதுபோல் அரசால் அங்கீகரிக்கப்படாத நிதி நிறுவனங்களின் விளம்பரங்களை பார்த்து முதலீடு செய்ய வேண்டாம். இதுகுறித்து போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்து உண்மை தன்மையை அறியலாம்.

வீடு, கடையின் உரிமையாளர்கள் வாடகைக்கு விடும்போது அந்த நபர்கள் பற்றி முழுமையான விவரங்களை தெரிந்தும், அவர்களின் பான்கார்டு, ஆதார் கார்டு, நிரந்தர முகவரி ஆகிய ஆவணங்களை பெற வேண்டும். நபர்கள் குறித்து சந்தேகம் இருந்தால் அருகில் உள்ள போலீஸ் நிலையத்தில் தகவல் தெரிவிக்கலாம்.

ஆன்லைனில் தங்களது வங்கியின் மூலமாக பேசுவதாக கூறி வங்கி கணக்கை அப்டேட் செய்ய வேண்டும் என்றும், ஓ.டி.பி. நம்பரை பகிருமாறு கூறினால் வங்கி கணக்கில் உள்ள பணத்தை எடுத்துவிடுவார்கள். அவ்வாறு கூறாமல் எச்சரிக்கையாக இருங்கள். பொதுமக்கள் தங்களது வீடுகளிலும், வியாபார நிறுவனங்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும். இதனால் குற்றவாளிகளை எளிதில் கண்டறிய முடியும். பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் கிராம கண்காணிப்பு கமிட்டி உருவாக்கி அதன் மூலமாக போலீசுடன் நல்லுறவு ஏற்படுத்தி புகார்களை தெரிவிக்கலாம்.

வெளிமாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வந்து வேலைக்கு வரும் நபர்கள் அந்த நிறுவனத்தின் உரிமையாளர், மேலாளர் அந்த நபரின் முழு விவர ஆதாரங்களை பெற வேண்டும். நபர் குறித்து போலீஸ் நிலையத்தில் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. பொதுமக்கள் இதற்கு ஒத்தழைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## சிவன்மலை ஊராட்சியில் கலைஞர் மக்கள் சேவை முகாம் இன்று




திருப்பூர், அக். 17

தி.மு.க.திருப்பூர்தெற்குமாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசு சார்பில் கலைஞர் மக்கள் சேவை முகாம் காங்கயம் ஊராட்சி ஒன்றியம் சிவன்மலை ஊராட்சி ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் திருமண மண்டபத்தில் நாளை(செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடக்கிறது.

முகாமை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்து பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

முகாமில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள அரசு அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளார்கள். எனவே சிவன்மலை ஊராட்சி பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கை மனுக்களை வழங்கி பயன்பெறலாம். கோரிக்கை மனுவுடன் தங்கள் முகவாி, செல்போன் எண், ஆதார் கார்டு நகல், குடும்ப அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருமுருகன்பூண்டி ஏ.வி.பி., பள்ளியில் அப்துல்கலாம் பிறந்தநாள் விழா





திருப்பூர், அக். 17

திருமுருகன்பூண்டி ஏ.வி.பி. டிரஸ்ட் நேஷனல் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் 92வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளியின் தாளாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார்.

மாணவர்கள் வெண்மை, கருமை, சிகப்பு, மஞ்சள் வண்ணத்தில் ஆடை அணிந்து கலாமின் திருமுகம் தோன்ற அணிவகுத்து அமர்ந்த காட்சியானது கலாமை நேரில் காண்பது போன்ற எண்ண அலைகளை உருவாக்கியது. மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து ராக்கெட் ஒன்றை உருவாக்கி அதன் அருகில் கலாம் நிற்பது போன்று அமைத்திருந்த காட்சியும், கலாமின் நூற்றுக்கணக்கான பொன்மொழிகளை எழுதி மரங்களில் வரிசையாக தோரணம்போல் கட்டியிருந்த காட்சியும் காண்போரை கவர்ந்தது. "பசுமை இந்தியாவை" நினைவு படுத்தும் விதமாக அவரைப் போலவே வேடமணிந்த மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டனர். மேலும் மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டன. விழாவில் பள்ளியின் முதல்வர் பிரியாராஜா, ஒருங்கிணைப்பாளர் அபிதாபானு, மேலாளர் ராமசாமி, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திருமூர்த்தி அணையில் குதித்து கோவை தம்பதி தற்கொலை

உடுமலை, அக். 17

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ளது திருமூர்த்தி அணை. தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்த அணையில், தற்போது வடகிழக்கு பருவமழையின் காரணமாக தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க தம்பதிகள் அணையின் ஓரமாக இருந்து உள்ளனர். அப்போது அப்பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருவர், இந்த பக்கம் இருக்க வேண்டாம், இது மிகவும் ஆபத்தான பகுதி என்று வயதான தம்பதிகளிடம் கூறி விட்டு, சென்று விட்டார். அவர் கொஞ்சம் தூரம் செல்வதற்குள் திடீரென கணவன்மனைவி இருவரும் ஒன்றாக அணையில் குதித்து தற்கொலை செய்து கொண்டனர். உடனே இதுகுறித்து தளி போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். மேலும் தீயணைப்பு படையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அணையில் தண்ணீர் வரத்து அதிகம் காணப்பட்டதாலும், இரவு அதிக நேரமாகி விட்டதாலும் அவர்களின் உடலை மீட்க முடியவில்லை. இந்நிலையில் இன்று அதிகாலை தீயணைப்பு படையினர் துரிதமாக செயல்பட்டு சல்லடை போட்டு தேடினர். இதில் இருவரது உடலும் மீட்கப்பட்டது. பின்னர் இதுகுறித்து தளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் இவர்கள் கோவையை சேர்ந்தவர்கள் என தெரிய வந்தது. ஆனால் கோவையில் எந்த இடம்? பெயர் என்ன? என்ற விவரம் எதுவும் தெரியவில்லை. இதனால் தளி போலீசார், அவர்களது புகைப்படத்தை கோவைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# கிழக்கு கடற்கரை சாலையில் நடந்த சைக்கிள் போட்டி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, அக். 17

சென்னை கிழக்கு கடற்கரை சாலை கானத்தூர் ரெட்டிக்குப்பத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், எச்.சி.எல். நிறுவனம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து சைக்கிள் போட்டியை நேற்று நடத்தியது. அதிகாலை 5 மணிக்கு நடந்த இந்த போட்டியை விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடி அசைத்து தொடங்கிவைத்தார். அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகித்தார்.



இந்த போட்டி 55 கி.மீட்டர், 23 கி.மீட்டர் மற்றும் 15 கி.மீட்டர் ஆகிய 3 பிரிவுகளில் நடைபெற்றது. இதில் 1,125 (956 ஆண்கள் மற்றும் 169 பெண்கள்) வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். கோவளம், வட நெம்மேலி, பூஞ்சேரி ஆகிய பகுதிகளில் சைக்கிள் போட்டிக்கான சுற்றுப்பாதை அமைக்கப்பட்டிருந்தது. சைக்கிள் போட்டி நடந்த பகுதியில் போலீசார் பாதுகாப்பு அளித்தனர்.

போட்டியின் அளவீடுகள் நிர்ணயிக்கப்பட்ட 3 பகுதிகளில் டிஜிட்டல் டயர் பதிவு கருவிகளை கொண்டு கண்காணிக்கப்பட்டது. போட்டிக்காக கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் வரக்கூடிய வாகனங்கள் மாற்று பாதையில் திருப்பிவிடப்பட்டது. புதுச்சேரியில் இருந்து சென்னை வந்த வாகனங்கள் வெங்கம்பாக்கத்தில் இருந்து செங்கல்பட்டு வழியாக திருப்பி விடப்பட்டது.

கிழக்கு கடற்கரை சாலையில் இருந்து புதுச்சேரி செல்லும் வாகனங்கள் சோழிங்கநல்லூர் வழியாக ஓ.எம்.ஆர். சாலை வழியாக அனுமதிக்கப்பட்டது. போக்குவரத்து வேறு பாதையில் மாற்றி விடப்பட்டு இருந்ததால் சைக்கிள் போட்டியில் பங்கேற்றவர்கள் அதிகாலை பொழுதில் சைக்கிள்களை உற்சாகமாக ஓட்டிச்சென்றனர். அவர்களுக்கு பின்னால் மருத்துவ பிரிவினர், சைக்கிள் பழுது பார்க்கும் ஊழியர்கள் கொண்ட குழுவினர் மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்தனர்.

இந்த சைக்கிள் பேரணியில் வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களை சேர்ந்த பெண்களும் ஆர்வத்துடன்கலந்துகொண்டு சைக்கிள் ஓட்டி சென்ற காட்சிகளை காண முடிந்தது.

தொழில் முறை மற்றும் அமெச்சூர் ஆகிய இருபிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரிசுத்தொகை வழங்கினார். இந்த போட்டியில் வெற்றி பெற்ற தொழில் வல்லுனர்கள், அமெச்சூர்களுக்கு தலாரூ.15 லட்சம் என ரூ.30 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர்அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர்ராகுல்நாத், தாம்பரம் போலீஸ் துணை கமிஷனர்பவன்குமார்ரெட்டி, இணை கமிஷனர் மூர்த்தி, எச்.சி.எல். நிறுவனத் தலைவர் சுந்தர் மகாலிங்கம், ஆசிய சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பு தலைவர் ஓன்கர் சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேடசந்தூர் அருகே கண்டக்டரை சரமாரியாக தாக்கி பஸ் கண்ணாடியை கல்வீசி உடைத்த மர்ம கும்பலை போலீசார் வலை

திண்டுக்கல், அக். 17

ஒட்டன்சத்திரத்தில் இருந்து வேடசந்தூர் பஸ் நிலையத்துக்கு நேற்று மாலை 5 மணி அளவில் தனியார் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த பஸ்சில் டிரைவராக ஆயக்குடியை சேர்ந்த கதிரேசன் (வயது 35), கண்டக்டராக சாமியார்புதூரை சேர்ந்த செல்வராஜ் (29) ஆகியோர் இருந்தனர்.




வேடசந்தூர் வந்ததும், கண்டக்டர் செல்வராஜ் பஸ்சை விட்டு இறங்கி பஸ்நிலையத்தில் உள்ள ஒரு டீக்கடைக்கு நடந்து சென்றார். அப்போது ஆட்டோவில் 5 பேர் கொண்ட மர்ம கும்பல் வந்தது. அவர்கள் ஆட்டோவை செல்வராஜ் மீது மோதுவது போல் ஓட்டினர். இதனால் அவர் சுதாரித்துகொண்டுவிலகினார். மேலும் ஆத்திரமடைந்த செல்வராஜ், அந்த ஆட்டோவின் கண்ணாடியை உடைத்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆட்டோவில் இருந்து இறங்கிய கும்பல், அவரை சரமாரியாக தாக்கிவிட்டு தப்பி சென்றது.

இதில், படுகாயம் அடைந்த செல்வராஜை அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக வேடசந்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்து அவர் மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து மாலை 5.45 மணிக்கு அந்த தனியார் பஸ் வேடசந்தூரில் இருந்து ஒட்டன்சத்திரம் நோக்கி புறப்பட்டது. பஸ்சில் மாற்று கண்டக்டராக மனோஜ் என்பவர் வந்தார். பஸ்சில் 50க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். வேடசந்தூர் அருகே சேனன்கோட்டை பஸ் நிறுத்தத்தை கடந்து சென்றபோது, செல்வராஜை தாக்கிய அதே கும்பல் ஆட்டோவில் வந்து பஸ்சை வழிமறித்தது. மேலும் பஸ் மீது கல்வீசி தாக்கியது.

இதை பார்த்து பஸ்சில் இருந்த பயணிகள் அலறி கூச்சலிட்டனர். உடனே அந்த கும்பல் ஆட்டோவில் ஏறி மின்னல் வேகத்தில் தப்பி சென்றது. கல்வீச்சில் பஸ்சின் முன்பக்க கண்ணாடி உடைந்து, டிரைவர் கதிரேசன் உள்பட 3 பேர் காயம் அடைந்தனர். பின்னர் அவர்கள் சிகிச்சைக்காக வேடசந்தூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இதுகுறித்த தகவலின் பேரில் வேடசந்தூர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்கள் வேலுமணி, பாண்டியன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர். மேலும் தப்பியோடிய மர்மகும்பலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

கண்டக்டரை தாக்கி விட்டு, பஸ் கண்ணாடியை மர்ம கும்பல் உடைத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் திருப்பூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# ஈரோட்டில் கியாஸ் சிலிண்டர் குழாயை மூக்கில் சொருகி என்ஜினீயர் தற்கொலை

ஈரோடு, அக். 17

ஈரோடு எஸ்.கே.சி. ரோடு முதல் வீதியை சேர்ந்தவர் சந்திரசேகரன். இவருடைய மனைவி சுகந்தி. மகன் மதிவதனசுந்தரம் (வயது 31). என்ஜினீயர்.

மதிவதனசுந்தரம் தனது தந்தையுடன் மளிகை கடைகளுக்கு பொருட்கள் சப்ளை செய்யும் தொழில் செய்து வந்தார். சந்திரசேகரனுக்கும், சுகந்திக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து மனைவியை பிரிந்து, ஈரோடுகரூர் ரோடு காந்திஜி வீதியில் கடந்த 7 மாதங்களாக சந்திரசேகரன் தனியாக வசித்து வருகிறார். மதிவதன சுந்தரம் தனது தாயுடன் வசித்து வந்தார்.



மேலும் வேலை விஷயமாக தந்தை வீட்டுக்கு அவ்வப்போது சென்று வருவது வழக்கம். இந்த நிலையில் மதிவதன சுந்தரம் கடந்த சில நாட்களாக ஏதோ மனவேதனையில் இருந்து வந்ததாக தெரிகிறது.

இதன் காரணமாக சம்பவத்தன்று அவர் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து தனது தந்தை வீட்டுக்கு சென்றுள்ளார்.

அங்கு சந்திரசேகரன் வீட்டில் இல்லை. இதைத்தொடர்ந்து மதிவதன சுந்தரம் வீட்டில் புதிதாக வாங்கி வைக்கப்பட்டு இருந்த கியாஸ் சிலிண்டரை திறந்து, அதில் குழாயின் ஒரு பகுதியை தனது மூக்கில் சொருகி உள்ளார். பின்னர், பிளாஸ்டிக் கவரை கொண்டு முகத்தை நன்கு மூடிக்கொண்டு ரப்பரால் இறுக்கியதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர் சிலிண்டரில் இருந்து வந்த கியாசை சுவாசித்து உள்ளார்.

இதில் சிறிது நேரத்தில் அவர் மயங்கி விழுந்துவிட்டார். இதைப் பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக, ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே மதிவதன சுந்தரம் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து, மதிவதன சுந்தரத்தின் தற்கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஊட்டி ரெயில் நிலையத்தில் 116வது மலை ரெயில் தினம் சுற்றுலா பயணிகளுக்கு இனிப்பு வழங்கி வரவேற்பு

நீலகிரி, அக். 17

ஊட்டி ரெயில் நிலையத்தில் 116வது மலை ரெயில் தினம் கொண்டாடப்பட்டது. சுற்றுலா பயணிகளுக்கு இனிப்பு வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது.



சர்வதேச சுற்றுலாத்தலமான நீலகிரியில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மலை ரெயில் உள்ளது. கடந்த 1898ம் ஆண்டு முதல் மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் வரை மலை ரெயில் இயக்கப்பட்டது. அதன் பின்னர் 1908ம் ஆண்டு அக்டோபர் 15ந் தேதி முதல் ஊட்டி வரை நீட்டிக்கப்பட்டு மலை ரெயில் இயக்கம் தொடங்கியது.

இதைத்தொடர்ந்து நூற்றாண்டை கடந்த மலை ரெயிலுக்கு கடந்த 2005ம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு பாரம்பரிய அந்தஸ்து வழங்கியது. மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் வரை நீராவி என்ஜின் மூலம் மலை ரெயில் இயக்கப்படுகிறது. இதில் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் பயணம் செய்து வருகின்றனர்.

இந்த மலை ரெயிலின் 116வது தினம் ஊட்டி ரெயில் நிலையத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. தெற்கு ரெயில்வே சேலம் கோட்ட உதவி இயக்குனர் சுப்ரமணி, ஊட்டி நிலைய அதிகாரி மணிகண்டன் ஆகியோர் கேக் வெட்டி கொண்டாடினர். மேலும் சுற்றுலா பயணிகளுக்கு இனிப்பு மற்றும் கேக் வழங்கி வரவேற்பு அளித்தனர். மேலும் சுற்றுலா பயணிகளை வரவேற்கும் வகையில், தோடர் இன மக்கள் பாரம்பரிய நடனமாடினர்.

நீலகிரி மலை ரெயில் பாதுகாப்பு சங்க நிர்வாகி நடராஜ் மற்றும் நிர்வாகிகள், மலை ரெயிலில் ஊட்டிக்கு வந்த ரெயில் என்ஜின் டிரைவர், சுற்றுலா பயணிகளுக்கு பூக்கள் கொடுத்து வரவேற்றனர். மேலும் இனிப்புகள் வழங்கி, மலை ரெயிலின் சிறப்புகள் பற்றி விளக்கி பேசினர்.

இதுகுறித்து விழா ஏற்பாட்டாளர்கள் கூறுகையில், சுற்றுலா மக்களின் சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சுற்றுலா பயணிகளை கவர கூடுதல் வழிமுறைகளை கையாள வேண்டும் என்றனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்: மாவட்ட கலெக்டர் தகவல்

திருப்பூர், அக். 17

திருப்பூர் மாவட்டத்தில் தமிழக அரசால் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தகவல் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் தமிழக அரசால் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" நடத்தும் திட்டம் 202324ம் நிதியாண்டில் நடைமுறை படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழுநீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மைநீக்கம்செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்கசிகிச்சைகள்சினைசரி பார்ப்பு, சுண்டுவாத அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் மற்றும் கருப்பை மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய்தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இத்திட்டமானது திருப்பூர் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியத்திற்குட்ட கிராம ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியத்திற்கு தலா20 முகாம்கள் வீதம் 260 முகாம்கள் அக்டோபர் 2023 மாதம் முதல் கால்நடை மருத்துவவசதி இல்லாத குக்கிராமங்களிலும் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் நடத்தப்படவுள்ளது. இவ்வாய்ப்பினை கால்நடை வளர்ப்போர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறும்,

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை விவசாயபெருமக்கள் / கால்நடைவளர்ப்போர் அணுகலாம் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்கள்.

# அண்ணாமலை 3ம் கட்ட நடைபயணம் தொடங்கினார் மத்திய மந்திரிகள் பியூஷ் கோயல், எல்.முருகன் பங்கேற்பு

அவினாசி, அக். 17

தமிழக பா.ஜ.க., தலைவர் அண்ணாமலை பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டும், மத்திய பா.ஜ.க., அரசின் 9 ஆண்டு கால சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்லவும் 'என் மண், என் மக்கள்' என்ற பெயரில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.



இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் மக்களை நேரடியாக சந்தித்து வருகிறார். கடந்த ஜூலை மாதம் 28ந்தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ராமேசுவரத்தில் அண்ணாமலையின் முதல் கட்ட நடைபயணத்தை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நெல்லையில் நடைபயணத்தை அண்ணாமலை மேற்கொண்டார். தனது 2ம் கட்ட நடைபயணத்தை செப்டம்பர் 3ந்தேதி தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் தொடங்கினார். தேனி, திண்டுக்கல், நீலகிரியில் நடைபயணம் மேற்கொண்டு, கோவையில் தனது 2ம் கட்ட நடை பயணத்தை செப்டம்பர் 27 ந்தேதி நிறைவு செய்தார்.

2 கட்ட நடைபயணத்தை முடித்த அவர் 3ம் கட்ட நடைபயணத்தை கடந்த 6ந்தேதி மேட்டுப்பாளையத்தில் தொடங்க இருந்தார். ஆனால் மிலாடி நபி காரணமாக மேட்டுப்பாளையத்தில் நடக்க இருந்த நடைபயணம் ஒத்திவைக்கப்பட்டது.

தொடர்ந்து அவரது டெல்லி பயணம், உடல்நலக்குறைவு காரணமாக அவரது நடைபயணம் மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்கப்பட்டு, இன்று 16ந்தேதி அவினாசியில் இருந்து தொடங்கும் என தமிழக பா.ஜனதா தலைமை அறிவித்தது. அதன்படி இன்று காலை 11மணிக்கு நீலகிரி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாவட்டம் அவினாசி தொகுதியில் இருந்து தனது 3ம் கட்ட நடை பயணத்தை அண்ணாமலை தொடங்கினார். மத்திய வணிகம் மற்றும் தொழில்துறை, உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை மந்திரி பியூஸ்கோயல், மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை இணை மந்திரி எல்.முருகன் ஆகியோர் நடைபயணத்தை தொடங்கி வைத்தனர்.

அவிநாசி சேவூர் ரோட்டில் இருந்து நடைபயணத்தை தொடங்கிய அண்ணாமலை, அவிநாசி தாலுகா அலுவலகம், வடக்கு ரதவீதி, கிழக்கு ரத வீதி, பி.எஸ். சுந்தரம் வீதி வழியாக சுமார் 2 கி.மீ., தூரம் வரை நடந்து சென்று அவினாசி புதிய பஸ் நிலையத்தை அடைந்தார். அங்கு பொதுமக்கள் மற்றும் கட்சியினர் மத்தியில் அண்ணாமலை பேசினார்.

அவிநாசியில் நடை பயணம் மேற்கொண்ட அண்ணாமலைக்கு வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அவருடன் திரளான பா.ஜனதா கட்சியினரும் ஊர்வலமாக நடந்து வந்தனர். வழிநெடுகிலும் சாலையோரம் திரண்டிருந்த பொதுமக்களை பார்த்து அண்ணாமலை உற்சாகமாக கையசைத்தும், கும்பிட்ட வாறும் நடந்து சென்றார். அப்போது பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை புகார் பெட்டியில் அளித்தனர். வியாபாரிகளை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை நேரிடையாக கேட்டறிந்ததுடன் அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். அண்ணாமலை நடை பயணத்தையொட்டி அவினாசியில் பா.ஜ.க., கொடி, தோரணங்களுடன் தொண்டர்கள் உற்சாக நடனமாடினர்.

அண்ணாமலையை வரவேற்று அவிநாசியின் பல்வேறு பகுதிகளில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் சார்பில் வரவேற்பு வளையங்கள், டிஜிட்டல் பேனர்கள் வைக்கப்பட்டு இருந்தது. கொங்குநாட்டின் பாரம்பரிய கலையான வள்ளி கும்மி நடனம் ஆடியும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அண்ணாமலை நடைபயணத்தால் அவிநாசி பகுதியானது களைகட்டியது. ஏராளமான போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அவினாசியில் நடைபயணத்தை முடித்து கொண்டு காரில் மேட்டுப்பாளையத்திற்கு அண்ணாமலை செல்கிறார்.

பின்னர்மாலை 4 மணிக்கு மேட்டுப்பாளையம் மெட்ரோ பள்ளி முன்பு அண்ணாமலை தனது நடைபயணத்தை தொடங்குகிறார். அவருக்கு மேட்டுப்பாளையம், காரமடை உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பா.ஜ.க.வினர் திரண்டு வந்து மேள, தாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். வரவேற்பு முடிந்ததும், அங்கிருந்து பல்வேறு வீதிகள் வழியாக 2 அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு நடந்து செல்கிறார். மெட்ரோ பள்ளியில் தொடங்கும் பயணம் மேட்டுப்பாளையம் பஸ் நிலையத்தில் மாலை 6.30 மணிக்கு முடிவடைகிறது. அதனை தொடர்ந்து அங்கு பா.ஜனதா சார்பில் பொதுக் கூட்டம் நடக்கிறது.

அந்த கூட்டத்தில் பங்கேற்று அண்ணாமலை பேசுகிறார். அவினாசி மற்றும் மேட்டுப்பாளையத்தில் நடைபெறும் நடைபயணத்தில் மத்திய மந்திரிகள் பியூஸ்கோயல், எல்.முருகன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அவினாசி, மேட்டுப்பாளையத்தில் இன்று நடைபயணம் மேற்கொள்ளும் அண்ணாமலை, நாளை 17 ந்தேதி (செவ்வாய்க்கிழமை) ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூரிலும், 18 ந்தேதி பவானிசாகர், கோபிசெட்டிபாளையத்திலும் நடைபயணம் மேற்கொள்கிறார். 19ந் தேதி திருப்பூர் மாவட்டம் பல்லடம், சூலூரிலும், 20ந்தேதி திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, 25ந் தேதி பெருந்துறை, மொடக்குறிச்சியிலும் நடைபயணம் செல்கிறார். 26ந்தேதி ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கிலும், 27ந்தேதி சங்ககிரி, குமாரபாளையம், 28ந்தேதி நாமக்கல், திருச்செங்கோட்டிலும் நடை பயணம் மேற்கொள்கிறார். அ.தி.மு.க.வுடனானகூட்டணிமுறிவுக்கு பிறகு அண்ணாமலை மேற்கொள்ளும் 3ம் கட்ட நடைபயணம் தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# ஈஷா இல்லாவிட்டால் மரம் நடும் விழிப்புணர்வு தமிழ்நாட்டில் இந்தளவிற்கு அதிகரித்து இருக்காது: செல்லமுத்து புகழாரம்

பல்லடம், அக். 17

ஈஷாவின் காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் 'கோடிகளை கொடுக்கும் சந்தனம் சாமானியர்களுக்கும் சாத்தியம்' என்ற மர விவசாய் கருத்தரங்கு திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற்றது. முன்னோடி விவசாயி துரைசாமி அவர்களின் 50 ஏக்கர் சந்தன பண்ணையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தமிழ்நாடு முழுவதும் இருந்து சுமார் 3,000 விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.




தொடக்க விழா நிகழ்வில் தமிழக விவசாய சங்க தலைவர் கு. செல்லமுத்து சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். விழாவில் அவர் பேசுகையில், "விவசாயிகளின் மனதில் மரம் நடும் எண்ணத்தை ஈஷா விதைத்து இருக்கிறது. ஈஷா என்ற ஒரு அமைப்பு இல்லாவிட்டால் மரம் நடும் விழிப்புணர்வு தமிழ்நாட்டில் இந்தளவிற்கு அதிகரித்து இருக்காது. தமிழ்நாடு மற்றும் கர்நாடக விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களின் விவசாய நிலங்களில் மரம் நடும் பணியை காவேரி கூக்குரல் இயக்கம் மேற்கொண்டு வருகிறது. இது மிகவும் பாராட்டுக்குரியது.

இந்த நிகழ்ச்சி நடைபெறும் தோட்டத்தின் உரிமையாளர் துரைசாமி சந்தன மரங்களை நட்டு 15 ஆண்டுகள் ஆகிறது. இன்னும் 5 ஆண்டுகளில் அவர் பெரும் கோடீஸ்வரர் ஆகி விடுவார். இக்கருத்தரங்கும் விழிப்புணர்வும் 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தால் தமிழக விவசாயிகள் கடனாளியாக இருக்க வேண்டிய தேவை இருந்து இருக்காது. எனவே, வரும் தலைமுறை விவசாயிகள் எதிர்காலத்தில் கடன் இன்றி, மானம் மரியாதையுடன் கௌரவமாக, பணக்காரர்களாக வாழ வேண்டும் என்றால் காவேரி கூக்குரல் சொல்லும் மரம் நடும் வழி முறைகளை முழு மனதாக ஏற்று செயலாற்ற வேண்டும்" என்றார்.

வனம் இந்தியா அறக்கட்டளையின் செயலாளர் சுந்தரராஜன் பேசுகையில், "ஈஷாவின் காவேரி கூக்குரல் இயக்கமும் வனம் இந்தியா அமைப்பும் பூமி தாயின் பசுமை போர்வையை அதிகரிக்கும் ஒரே நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது" என கூறினார்.

காவேரி கூக்குரல் இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறன் பேசுகையில், "உலகிலேயே மிக விலை உயர்ந்த மரம் சந்தன மரம் தான். இம்மரத்தை வளர்ப்பதன் மூலம் 15 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு மரத்தில் இருந்து மட்டும் குறைந்தபட்சம் ரூ.2 லட்சமும், 25 ஆண்டுகளுக்கு பிறகு ரூ.5 லட்சம் முதல் ரூ.7.5 லட்சம் வரையிலும் விவசாயிகள் சம்பாதிக்க முடியும். சந்தன மரத்தை எல்லா வகையான மண்ணிலும் வளர்க்க முடியும். இம்மரம் உப்பு தண்ணீரிலும் கூட வளரும் சாத்தியம் உள்ளது.

இம்மரத்திற்கு இவ்வளவு சிறப்புகள் இருந்தும் திருட்டு பயம் காரணமாக இதை வளர்க்க தயங்குகின்றனர். ஆனால், தற்போதைய தொழில்நுட்ப காலத்தில் மைக்ரோ சிப், சென்சார் மற்றும் ரேடார் தொழில்நுட்பம் என பல்வேறு விதமான தொழில்நுட்ப கருவிகள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. அடுத்த 15 ஆண்டுகளுக்குள் இன்னும் பல கருவிகள் வந்துவிடும். எனவே, சந்தன மரத்தை பயமின்றி நடவு செய்யலாம்.

இந்திய சந்தனத்திற்கு உலகளவில் பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. 1950ம் ஆண்டுகளில் சுமார் 4,000 டன் வரை சந்தனத்தை நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருமானம் ஈட்டினோம். ஆனால், தற்போது நம்முடைய உள்நாட்டு தேவைக்கு கூட வெளிநாடுகளில் இருந்து சந்தனத்தை இறக்குமதி செய்து வருகிறோம். எனவே சந்தன மரத்திற்கான தேவை நம்மிடம் அதிகம் இருக்கிறது. அதை பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டில் விவசாயிகள் அதிகளவில் சந்தன மரங்களை வளர்க்க வேண்டும்.

சந்தன மரத்தை வெட்டி விற்பனை செய்வதில் உள்ள சட்ட சிக்கல்களும் படிப்படியாக நீங்கி வருகிறது. சமீபத்தில் மத்திய அரசு கொண்டு வந்த சட்ட திருத்தத்தில் கூட வன சட்டங்கள் எதுவும் விவசாய நிலங்களுக்கு பொருந்தாது என கூறியுள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தாங்கள் விரும்பும் எந்த வகையான மரத்தையும் தங்கள் நிலங்களில் வளர்த்து விற்க முடியும். எனவே, விவசாயிகள் கோடீஸ்வரர்களாக ஆக மாறுவதற்கு சந்தன மரம் வளர்ப்பது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும்" என்றார்.

இக்கருத்தரங்கில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து மரம் சார்ந்த விவசாய விஞ்ஞானிகளும், முன்னோடி மர விவசாயிகளும் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர்.

குறிப்பாக, பெங்களூரு IWST நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற விஞ்ஞானி டாக்டர் சுந்தரராஜ் சந்தன மரத்தை நடவு முதல் விற்பனை செய்வது வரை உள்ள அனைத்து முக்கிய அம்சங்கள் குறித்தும் விரிவாக பேசினார். கேரளாவைச் சேர்ந்த வன அதிகாரி வினோத் குமார் 'சந்தனத்தின் உலகளாவிய தேவை' என்ற தலைப்பிலும், காரைக்குடி விவசாயி ராமன் 'மானாவாரி நிலத்தில் செம்மர வளர்ப்பு' என்ற தலைப்பிலும் பேசினர்.

இதுதவிர, முன்னோடி சந்தன மர விவசாயிகள் கவிதா மிஸ்ரா (கர்நாடகா), இஸ்தரப்பு ரெட்டி (தெலுங்கானா), ரமேஷ் பலூடகி (கர்நாடகா), நிலத்தின் உரிமையாளரும் முன்னோடி சந்தன மர விவசாயியுமான துரைசாமி உள்ளிட்டோர் தங்களின் அனுபவங்களையும் பகிர்ந்துக் கொண்டனர்.

# மீண்டும் ஊருக்குள் புகுந்த சிறுத்தை கன்றுக்குட்டியை கடித்து குதற முயன்றதால் பொதுமக்கள் பீதி

பல்லடம், அக். 17

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கள்ளிப்பாளையம் பகுதியில் கடந்த 7ந் தேதி சிறுத்தை ஒன்று சாலையை கடந்து சென்றதாக அந்த பகுதியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து காமநாயக்கன்பாளையம் போலீசார் மற்றும் திருப்பூர் மாவட்ட வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து தீவிர ஆய்வு மேற்கொண்டனர். அவர்கள் மேற்கொண்ட ஆய்வில் அந்த பகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருந்ததற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை என்று தெரிவித்தனர்.



மேலும் அந்த பகுதியில் காலடித்தடங்களை ஆய்வு செய்தபோது அது சிறுத்தையின் கால் தடம் இல்லை என்றும் தெளிவாக தெரிவித்தனர். இந்நிலையில் சில நாட்களுக்கு முன்பு பல்லடம்தாராபுரம் சாலையில் உள்ள துத்தாரிபாளையத்தில் வித்தியாசமான உருவம் கொண்ட மிருகம் ஒன்று சாலையை கடந்து சென்றதாக ஒருவர் தெரிவித்தார்.

இதையடுத்து சம்பவ இடம் சென்ற வனத்துறையினர் அங்கு ஆய்வு மேற்கொண்ட போது அங்கிருந்த கால் தட பதிவுகள் நாயின் கால் தட பதிவுகளை விட சற்று பெரியதாக இருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் சிறுத்தையின் கால் தடப்பதிவுகள் போல் அல்லாமல் இருந்தது.

சிறுத்தையின் கால் தட பதிவுகளில் நகம் பதிவாகி இருக்கும். ஆனால் இந்த கால் தட பதிவுகளில் அப்படி இல்லை என்று தெரிவித்தனர். இந்நிலையில் பொதுமக்கள் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி சிறுத்தை நடமாட்டம் குறித்த பீதியை போக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நிலையில் பல்லடம் அருகே அலகுமலை பகுதியில் நேற்றிரவு சிறுத்தை ஒன்று புகுந்ததாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். விவசாய தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த கன்று குட்டியை கடித்து கொல்ல முயற்சித்ததாகவும், அப்போது அருகே இருந்த விவசாயிகளின் அலறல் சத்தம் கேட்டு கன்றுக்குட்டியை விட்டு விட்டு சென்றதாக கூறப்படுகிறது.

இது குறித்த தகவல் அறிந்ததும் வனத்துறை மற்றும் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். திருப்பூர் மாவட்ட எஸ்.பி., சாமிநாதன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது கன்றுகுட்டி மீது சிறுத்தை விரலால் கீறியதற்கான தடயங்கள் இருந்தது. அதனைக்கண்டு பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இதனால் பல்லடம் பகுதி பொதுமக்கள் அச்சத்தில் தவித்து வருகின்றனர். மேலும் சிறுத்தையை பிடிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். பல்லடம் அருகே மீண்டும் சிறுத்தை ஊருக்குள் புகுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருப்பூரில் சூடுபிடிக்கும் டீசர்ட்டுகள் விற்பனை

திருப்பூர், அக். 17

திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனங்கள் மூலம் விளையாட்டு போட்டி , தேர்தல் பிரசாரம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அணியக்கூடிய வகையில் டீசர்ட் பனியன் தயாரித்து கொடுக்கப்படுகிறது.

தற்போது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற்று வரும் நிலையில், இந்திய கிரிக்கெட் வீரர்கள் அணிவதுபோன்று, நீலநிறத்தில் தயாரிக்கப்பட்ட 'சிங்கிள் ஜெர்சி' டீ சர்ட்களுக்கு கிராக்கி அதிகமாகி உள்ளது. 'இந்தியா' மற்றும் வீரர்களின் பெயர் பிரின்ட் செய்யப்பட்ட 'டீசர்ட்' பனியன்களை திருப்பூரில் வாங்க கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆடை வர்த்தகர்கள் கூறுகையில், வழக்கத்தை விட குறைவாக இருந்தாலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து, 'டீசர்ட்' கேட்டு ஆர்டர்கள் வருகிறது. குறிப்பாக, 'ஆன்லைன்' விசாரணை வேகமெடுத்துள்ளது என்றனர்.



இதேபோல் நடிகர் விஜய் நடித்த லியோ திரைப்படம் வருகிற 19 ந்தேதி வெளியாகிறது. இப்படம் வெளியாகும் நாளில், வரவேற்கும் விதமாக பல்வேறு ஏற்பாடுகளை ரசிகர்கள் செய்துள்ளனர். இந்தநிலையில் லியோ படத்தை குறிப்பிடும் வகையிலான டீசர்ட் அணிந்து கொள்ள ரசிகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்காக திருப்பூர் பனியன் உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆர்டர்கள் வந்துள்ளது. பனியன் உற்பத்தியாளர் ஒருவர் கூறுகையில், ரஜினி நடித்த கபாலி படம் வெளியானபோது அதை சிறப்பிக்கும் வகையில், டீசர்ட் உற்பத்தி செய்யப்பட்டது. நம் நாடு மட்டுமின்றி அமெரிக்காவுக்கும் கூட அனுப்பப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக அதிக அளவிலான ஆர்டர் லியோ படத்துக்கு பெறப்பட்டுள்ளது.

விஜய் நற்பணி இயக்கத்தினர், ரசிகர்கள் அதிக அளவில் இதற்கு ஆர்டர் அளித்து வாங்கியுள்ளனர். லியோ படத்தின் விஜய் போஸ்டர், அதில் இடம் பெறும் பஞ்ச் டயலாக் ஆகியன அச்சிட்ட டீசர்ட்கள் அதிக அளவில் விற்பனையாகி வருகிறது என்றார்.

# சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலில் நவராத்திரி பெருவிழாவை துர்கா ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, அக். 17

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மகாசிவராத்திரி பெருவிழா பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டது.



அந்த வகையில், உலகில் தீமைகளை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்ற சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற தொடர் நிகழ்வாக கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா இந்த ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை கோவில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருமணமண்டபத்தில் கொலுவுடன் நேற்று தொடங்கியது. இந்த விழா வருகிற 24ந் தேதி வரை 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

விழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மனைவி துர்கா ஸ்டாலின் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து, கொலுவை பார்வையிட்டதோடு, சகலகலாவல்லி மாலை பூஜையில் கலந்து கொண்ட மாணவமாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், பேனா, பென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்களையும் வழங்கினார்.

நிறைவாக, மாம்பலம் சகோதரிகள் ஆர்.விஜயலட்சுமி மற்றும் ஆர்.சித்ரா இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், எம்.எல்.ஏ. மயிலை த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், ந. திருமகள், சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் கி.ரேணுகாதேவி, ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நவராத்திரி விழாவை யொட்டி தினமும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இதேபோல் வடபழனி முருகன் கோவிலிலும் நேற்று நவராத்திரி விழா கொலுவுடன் தொடங்கியது. 'சக்தி கொலு' எனும் பெயரில் அமைக்கப்பட்ட பிரமாண்ட கொலுவை உபயதாரர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர்.

நவராத்திரி விழா 24ந் தேதி வரை நடைபெற உள்ளது. விழாவையொட்டி, அம்மன் கொலு சன்னதியில் காலை 11 மணி முதல் 11.30 மணி வரை, மாலை 6 மணி முதல் 6.30 மணி வரை சிறப்பு பூஜை, தீபாராதனை நடத்தப்படுகிறது. கொலுவை பக்தர்கள் காலை 6.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் பார்வையிடலாம்.

நவராத்திரியின் நிறைவு நாளான 24ந் தேதி, விஜயதசமி அன்று வித்யாரம்பம் எனும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

# ஸ்ரீபெரும்புதூர் அருகே மோட்டார்சைக்கிளில் சென்ற போது மின்னல் தாக்கி என்ஜினீயரிங் மாணவர் பலி

ஸ்ரீபெரும்புதூர், அக். 17

ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர் வினய் குமார் (வயது 21). காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த தண்டலம் பகுதியில் உள்ள தனியார் என்ஜினீயரிங் கல்லூரியில் 4ம் ஆண்டு படித்து வந்தார்.

நேற்று முன்தினம் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. அப்போது வினய்குமார் தனது மோட்டார் சைக்கிளில், தன்னுடன் படிக்கும் ரேவனு, திவ்யதேஜாவு ஆகியோருடன் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த பாப்பான் சத்திரத்தில் தாங்கள் தங்கி இருக்கும் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.

கல்லூரி அருகிலேயே பெங்களூரு சென்னை தேசிய சாலையில் சென்றபோது திடீரென வினய்குமார் மீது மின்னல் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் தலையில் பலத்த காயம் அடைந்த வினய் குமார் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்து பரிதாபமாக இறந்தார்.

அவரது நண்பர்கள் இருவரும் காயமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இதுபற்றி ஸ்ரீபெரும்புதூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.



★மனைவி கோபித்துக் கொண்டு சென்றதால் விரக்தி அடைந்த சூளையை சேர்ந்த ஐ.டி. நிறுவன ஊழியர் விக்னேஷ் (வயது 28) தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

★கொடுங்கையூரில் மகள் மருத்துவ செலவுக்கு கடன் வாங்கி தருவதாக கூறி லோகநாதன் என்பவரது ஆதார் அட்டையை வாங்கி நூதன முறையில் செல்போன் வாங்கி மோசடி செய்த ஸ்ருதி (38) கைதானார்.

★பள்ளிக்கரணையில் மின்கம்பத்தில் இருந்து மின்கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி பசுமாடு உயிரிழந்தது.

★தண்டையார்பேட்டையில் இரும்பு வியாபாரி பிரகாஷ்பாபு(47) என்பவரை தாக்கி ரூ.8 லட்சம் கொள்ளையடித்த வழக்கில் சுரேஷ் (32), சிவா(30) சிக்கினர்.

★மதுரவாயலில் காரில் 30 கிலோ குட்கா கடத்தியதாக தினேஷ்குமார் (28), பஜன்லால் (24), பரசுராம் (28) ஆகியோரும், கொடுங்கையூரில் மளிகை கடையில் குட்கா விற்றதாக ஜேவியர் ராயப்பாவும் கைதானார்கள்.

# திண்டுக்கல் அருகே நல்லாம்பட்டியில் நடந்த மீன்பிடி திருவிழா

திண்டுக்கல், அக். 17

திண்டுக்கல் அருகே, நல்லாம்பட்டியில் நடந்த மீன்பிடி திருவிழா களைக்கட்டியது.



திண்டுக்கல்லை அடுத்த நல்லாம்பட்டியில் அச்சராஜாகுளம் உள்ளது. இந்த குளத்தின் அருகில் வடக்கு முனியப்பன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் திருவிழா நடைபெறும். இதையொட்டி அச்சராஜா குளத்தில் மீன்பிடி திருவிழாவும் நடைபெறுவது வழக்கம்.

இந்தநிலையில் வடக்கு முனியப்பன் கோவிலில் இந்த ஆண்டிற்கான திருவிழா நேற்று நடந்தது. அப்போது சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் அச்சராஜாகுளத்தில் மீன்பிடி திருவிழா தொடங்கியது. முதலில் குளக்கரையில் உள்ள கன்னிமார் தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை நடைபெற்றது. அதன்பிறகு ஊர் நாட்டாண்மை, கொடி அசைத்து மீன்பிடி திருவிழாவை தொடங்கி வைத்தார்.

அப்போது கரையில் ஏற்கனவே தயாராக இருந்த கிராம மக்கள் வலை, கூடை, ஊத்தா, கச்சா உள்ளிட்ட மீன்பிடி சாதனங்களுடன் குளத்தில் இறங்கினர். மீன்பிடி திருவிழா களை கட்டியது. போட்டிப்போட்டு கிராம மக்கள் மீன்களை பிடித்தனர்.

அப்போது சிலருக்கு பெரிய அளவிலான மீன்கள் சிக்கின. அவை 5 கிலோ முதல் 15 கிலோ வரை இருந்தது. இதில், ரோகு, கட்லா, ஜிலேபி, கெண்டை, விரால் உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்களை பொதுமக்கள் பிடித்தனர். எதிர்பார்த்ததை விட அதிக அளவில் மீன்கள் கிடைத்ததால் மீன்பிடி திருவிழாவிற்கு வந்திருந்த பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் அவற்றை வீட்டிற்கு கொண்டு சென்றனர்.

பின்னர் வீடுகளில் மீன் குழம்பு வைத்து சாப்பிட்டனர். இதேபோல் அக்கம் பக்கத்தினர், நண்பர்களுக்கு வழங்கி மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர். இதனால் கிராமங்களில் மீன்குழம்பு வாசனை கமகமத்தது.

# சமுதாய நலக்கூடம் மேற்கூரை இடிந்து 3 பேர் பலி: பஸ்சுக்காக காத்திருந்த போது நேர்ந்த சோகம்

உடுமலை, அக். 17

திருப்பூர் மாவட்டம் உடுமலை கொழுமம் பழனி செல்லும் சாலையில் சமுதாய நலக்கூடம் உள்ளது. இப்பகுதி பஸ் நிறுத்தமாகவும் உள்ளது. இதனால் காலை முதல் இரவு வரை அப்பகுதி பொதுமக்கள் சமுதாய நலக்கூடம் முன்பு பஸ்சுக்காக காத்து நின்று உடுமலை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வார்கள்.

கொழுமம் பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளர்களான மணிகண்டன் (வயது28), கவுதம்(29), முரளிராஜன் (35) ஆகியோர் வேலைக்கு செல்வதற்காக பஸ்சுக்காக சமுதாய நலக்கூடம் முன்பு காத்து நின்றனர்.

இந்தநிலையில் உடுமலை பகுதியில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக சமுதாய நலக்கூடத்தின் முன்புற ஸ்லாப் திடீரென இடிந்து, அதன் கீழ் நின்று கொண்டிருந்த 3 பேர் மீதும் விழுந்தது. இதில் மணிகண்டன், கவுதம், முரளிராஜன் ஆகியோர் இடிபாடுகளுக்கிடையே சிக்கி உயிருக்கு போராடினார்.

இதனைப்பார்த்த அப்பகுதி பொதுமக்கள் அதிர்ச்சியடைந்ததுடன் உடனே 3பேரையும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் முடியவில்லை. உடனே இது குறித்து குமரலிங்கம் போலீஸ் மற்றும் உடுமலை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்று 3பேரையும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். கட்டிட இடிபாடுகளை அகற்றி அடியில் சிக்கியிருந்த 3பேரையும் மீட்டனர். ஆனால் 3பேரும் மூச்சு திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் 3பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக உடுமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். வேலைக்கு செல்வதற்காக பஸ்சுக்கு காத்து நின்ற 3 தொழிலாளர்கள் மேற்கூரை இடிந்து பலியான சம்பவம் உடுமலை பகுதி பொதுமக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

3 பேர் பலியான சம்பவத்தை அறிந்ததும் அவர்களது உறவினர்கள் உடுமலை அரசு ஆஸ்பத்திரியில் குவிந்தனர். அவர்கள் 3பேரின் உடல்களை பார்த்து கதறி அழுதது நெஞ்சை உருக்குவதாக இருந்தது. இந்த சம்பவம் குறித்து குமரலிங்கம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சமுதாய நலக்கூடம் ஏற்கனவே சிதலமடைந்திருந்த நிலையில் அதனை இடித்து புதிய கட்டிடம் கட்டப்பட இருந்தது. இந்தநிலையில் மேற்கூரை இடிந்து 3பேர் பலியாகி உள்ளனர். இதையடுத்து அந்த கட்டிடம் முற்றிலும் அகற்றப்பட உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 17.10.2023



## வரதராஜ மன்னாருக்கு பிறந்த நாள்.. வைரலாகும் போஸ்டர்

இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'சலார்'. இந்த படத்தில் 'பாகுபலி' திரைப் படத்தில் நடித்திருந்த பிரபாஸ் கதாநாயகனாக நடித்துள் ளார். கே.ஜி.எப். திரைப்படத்தை தயாரித்த ஹோம் பாலே பிலிம்ஸ் 'சலார்' படத்தையும் தயாரிக்கிறது.

இந்த படத்தில் வரதராஜ மன்னார் என்ற கதாபாத்திரத் தில் நடிகர் பிரித்விராஜ் நடித்துள்ளார். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெரும ளவில் ஈர்த்தது. 'சலார்' திரைப்படம் டிசம்பர் 22ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய போஸ்டரை படக் குழு வெளியிட்டுள்ளது. அதாவது, நடிகர் பிரித்விராஜ் இன்று தனது பிறந்த நாளை கொண்டாடுகிறார். இவ ருக்கு வாழ்த்து தெரிவித்து படக்குழு இவரது கதாபாத் திர போஸ்டரை வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் அதிகம் பகிர்ந்து வருகின் றனர்.



## பிரபலங்கள் கலந்துகொள்ளும் நவராத்திரி கொண்டாட்டம்



தமிழின்முன்னணிதொலைக் காட்சியான ஸ்டார் விஜய் தொலைக்காட்சி தமிழகமெங் கும் ஏழு நகரங்களில் மக்களு டன் இணைந்து நவராத்திரி கொண்டாட்ட விழாவை நடத் துகிறது. தமிழகத்தில் காஞ்சிபு ரம், சென்னை, ஈரோடு, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை ஆகிய ஏழு இடங்களில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் விஜய் டிவி ஸ்டார்ஸ் உடன் இணைந்து திரு விளக்குப் பூஜை, பிர பலங்கள் கலந்து கொள்ளும் நவராத்திரி குறித்த சொற்பொழிவு அமர்வு, சூப்பர் சிங் கர்ஸ் கலந்துகொள்ளும் பக்திப்பாடல் நிகழ்ச்சி, செஃப் தாமுவின் ஸ்டார் விஜய் நவ ராத்திரி ஸ்பெஷல் பிரசாதம் ஆகியவை நடக்கவுள்ளது. நவராத்திரி பெண்களுக்கு உரித்தான விழா என்பதால் ஸ்டார் விஜய் ஸ்டார்ஸ் பெண் பிரபலங்கள் அனைவரும் இதில் மக்களுடன் இணைந்து கலந்துகொண்டு நவராத்திரியைக் கொண்டாடவுள்ள னர்.

திருவிளக்கு பூஜைக்கு முன்பதிவு டோக்கன் பெற்றுக்கொண்ட பக்தர்கள் விளக்கு மற்றும் பூஜை தட்டுடன் வந்தால் மட்டும் போதும் பூஜைக்கான அனைத்து பொருட் களும் வழங்கப்படும். விஜய் டிவி ஸ்டார்ஸ் உடன் இணைந்து நவராத்திரியை வெகு சிறப்பாக கொண்டாடலாம். சூப்பர் சிங்கர் திறமையாளர்களின் பாடல்களை நேரடி யாகக் கேட்டு மகிழலாம், அத்துடன் செஃப் தாமுவின் தயாரிப்பில் ஸ்டார் விஜய் நவராத்திரி ஸ்பெஷல் பிரசாதத்தை உண்டு மகிழலாம்.

இந்நிகழ்ச்சிகள் முதலாவதாக காஞ்சிபுரத்தில் 15 அக்டோபர் நடைபெற்றது. இதில் பாக்கியலட்சுமி சீரியலில் நடிக்கும் பாக்யலட்சுமி, ஆஹா கல்யாணம் சீரியலிலிருந்து மகா ஆகியோர் மக்களுடன் இணைந்து நவராத்திரி பூஜையில் கலந்துகொண்டனர். விஜய் டிவி நட்சத்திரங்கள் பூஜையில் கலந்துகொண்டதை மக்கள் அனைவரும் மகிழ்ச் சியுடன் பாராட்டினர்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து சென்னையில் 16 அக்டோபர் , ஈரோட்டில் 17 அக் டோபர் , திருச்சியில் 18 அக்டோபர் திருநெல்வேலியில் 20 அக்டோபர் , தஞ்சாவூரில் 21 அக்டோபர், மதுரையில் 22 அக்டோபர் ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. விஜய் டிவி நவராத்திரி ஸ்பெஷலாக கொலு வைக்கும் போட்டியையும் அறிவித் துள்ளது.

உங்கள் வீட்டில் வைக்கும் அழகான கொலுவின் போட்டோவை *@vijaytelevision*க்கு *#VijayGoluContest* எனும் *hashtag* உடன் இன்ஸ்டாவில் போஸ்ட் செய்யுங்கள். போட்டி யில் வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு ஒரு கிராம் தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும்.

## விஜய்க்கு வாழ்த்து தெரிவித்த ரஜினி.. காரணம் இதுதான்



ஜெயிலர் படத்தின் வெற்றியை தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த், லைகா நிறுவன தயாரிப்பில் இயக்குனர் ஞானவேல் இயக்கும் புதிய படத்தில் நடித்து வருகி றார். இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாத தொடக்கத் தில் திருவனந்தபுரத்தில் தொடங்கியது. தொடர்ந்து கடந்த 10ந்தேதி நெல்லை மாவட்டம் பணகுடி பகுதி யில் உள்ள ஓடு தொழிற்சாலை ஒன்றில் படப்பிடிப்பு நடந்தது. அங்கு தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற்ற படப்பிடிப்பில் ரஜினிகாந்த் கலந்து கொண்டார்.

முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்து இன்று தூத்துக்குடி வழியாக ரஜினி சென்னை சென்றார். அப்போது தூத்துக்குடி விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

புவனா ஒரு கேள்விக்குறி படத்திற்கு பிறகு தென் மாவட்டத்தில் படப்பிடிப்பிற்காக வந்தேன். இங்குள்ள மக்கள் மிகவும் அன்பான மக்கள். அவர்களை பார்த்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. ஒரு வருத்தம் என்னவென்றால் எல்லோருடனும் புகைப்படம் எடுக்க முடியவில்லை என்பது தான். இவ்வாறு அவர் கூறினார்.

மேலும், ரஜினியிடம், நடிகர் விஜய் நடித்து வெளியாகவுள்ள 'லியோ' படம் வருகிற 19ந்தேதி வெளியாகிறது. அதுபற்றி உங்கள் கருத்து என்ன என கேள்வி எழுப்பினர். அதற்கு ரஜினிகாந்த், 'அந்த படம் மிகப்பெரிய வெற்றியடைய எனது வாழ்த்துகள். லால்சலாம் படம் பொங்கலுக்கு வெளியாகும்' இவ்வாறு அவர் கூறினார்.

## நிர்வாகிகளுக்கு தன் கைகளினாலேயே உணவு பரிமாறிய விஷால்



செல்லமே படத்தின் மூலம் திரையுலகிற்கு கதா நாயகனாக அறிமுகமானவர் விஷால். அதன்பின்னர் சண் டக்கோழி, திமிரு, சத்யம், அவன் இவன், தாமிரபரணி, துப்பறிவாளன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன் னணி நடிகராக வலம் வருகி றார். இவர் நடிப்பில் சமீபத் தில் வெளியான மார்க் ஆண்டனி திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

தொடர்ந்து இவர் இயக்கு னர் ஹரி இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பி டிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. விஷால் நடிப்பில் மட்டுமல்லாது பல் வேறு சமூக நல பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், திருச்சியில் விஷால் மக்கள் நல இயக்க ஆலோசனை கூட்டம் நடை பெற்றது. இதில், திருச்சி, திண்டுக்கல், மதுரை மாவட்ட விஷால் மக்கள் இயக்க நிர் வாகிகள் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு அசைவ விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் விஷால், நிர்வாகிகளுக்கு தன் கைகளினாலே பிரியாணி பரிமாறினார். இந்த செயல் ரசிகர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## அரசியல்வாதியாக மிரட்டும் மாளவிகா நாயர்



இயக்குனர் அபிஷேக் நாமா இயக்கத்தில் உருவாகிவ ரும் திரைப்படம் 'டெவில்'. இந்த படத்தில் நந்தமுரி கல் யாண் ராம் கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் மணிமேகலா எனும் கதாப்பாத்திரத்தில் மாளவிகா நாயர் நடிக்கிறார். ஹர்ஷவர்தன் ராமேஷ்வர் இசையமைக்கும் இப்படத்திற்கு சவுந்தர் ராஜன்.எஸ் ஒளிப்பதிவும், தம்மி ராஜின் படத்தொகுப்பும் மேற்கொள்கின்றனர்.

ஸ்பை த்ரில்லர் படமாக உருவாகும் 'டெவில்' திரைப் படத்தை அபிஷேக் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.




சமீபத்தில் வெளி யான இப்படத் தின் டீசர் படத் தின் மீது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படம் நவம்பர் 24 அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், மாளவிகா நாயரின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள் ளது. இந்த போஸ்டரில் வித்தியாசமான ஹேர் ஸ்டைலில் அரசியல்வாதியாக தோன்றும் இவரது கதாப்பாத்திர பின்னணியில் , அமை தியை வெளிப்படுத்தும் புறாக்கள் காணப்படு கின்றன. இந்த போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

## மறுபடியுமா..? தொடர்ந்து சிக்கலில் சிக்கி தவிக்கும் 'லியோ

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித் துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். லியோ திரைப்படம் அக்டோபர் 19ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்திற்கான டிக் கெட் முன்பதிவு தமிழகத்தில் பல திரையரங்குகளில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தமிழகத்தில் அதிக இருக்கைகள் கொண்ட பல திரையரங்குகளில் டிக்கெட் முன்பதிவு தொடங்கவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது. அதாவது 'லியோ' திரைப்படத்தின் ஒருவார வசூலில் 75 சதவீதம் தயாரிப்பு நிறுவனம் கேட்ப தாக கூறப்படுகிறது. இது தொடர்பாக தயாரிப்பு நிறுவனத்திற்கும், திரையரங்கு உரி மையாளர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதாகவும் இதில் சுமூகமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

## நானும் கேப்டனும் போட்ட பிளான்தான் இது.. இங்கிலாந்தை வீழ்த்திய ரகசியமே இதுதான்.. ஆப்கன் வீரர் முஜீப்



உலகக் கோப்பை கிரிக்கெட் திருவிழாவில், லக்னோவில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கும் 14வது லீக்கில் 5 முறை சாம்பியனான ஆஸ்திரேலிய அணி, இலங்கையை எதிர்கொள்கிறது.

கம்மின்ஸ் தலைமையிலான ஆஸ்திரேலியா தனது முதல் இரு ஆட்டங்களில் இந்தியா மற்றும் தென்ஆப்பிரிக்காவிடம் உதை வாங்கியது. இரு ஆட்டங்களிலும் அந்த அணியின் ஸ்கோர் 200ஐ கூட தொடவில்லை. எஞ்சிய 7 லீக்கிலும் வெற்றி பெற்றால் தான் சிக்கலின்றி அரைஇறுதிக்கு முன்னேற முடியும். இனி ஒவ்வொரு ஆட்டமும் ஆஸ்திரேலியாவுக்கு வாழ்வாசாவா போன்றது தான்.

லக்னோவில் ஏற்கனவே தென்ஆப்பிரிக்காவிடம் மோதி இருப்பதால் அந்த அனுபவம் ஆஸ்திரேலியாவுக்கு அனுகூலமாக இருக்கும். ஆனால் இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 7 கேட்ச் வாய்ப்புகளை கோட்டை விட்டது. எனவே பேட்டிங், பவுலிங், பீல்டிங் மூன்றிலும் அசத்தினால் தான் சரிவில் இருந்து மீள முடியும், மிட்செல் மார்ஷ், வார்னர், சுமித், லபுஸ்சேன் உள்ளிட்ட பேட்ஸ்மேன்கள் அணியை தூக்கி நிறுத்த வேண்டிய தருணம் இதுவாகும். இல்லாவிட்டால் உலகக் கோப்பையில் முதல்முறையாக முதல் 3 ஆட்டங்களில் தோல்வியை சந்தித்த மோசமான வரலாற்றை சந்திக்க நேரிடும்.

ஆஸ்திரேலிய கேப்டன் கம்மின்ஸ் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், '2019ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் நாங்கள் லீக்கில் இந்தியா, தென்ஆப்பிரிக்காவிடம் மட்டும் தோற்றோம். இவ்விரு அணிகளும் சமீபத்தில் எங்களுக்கு எதிராக குடைச்சல் கொடுத்தனர். இப்போது வேறு அணிகளை சந்திக்கப்போகிறோம். அந்த அணிக்கு எதிராக நாங்கள் ஏற்கனவே சாதித்து இருப்பதால் நம்பிக்கையுடன் இறங்குவோம். ஒவ்வொரு ஆட்டத்தையும் ஏறக்குறைய இறுதிப்போட்டி போன்று பாவித்து விளையாடுவோம்' என்றார்.

இதே நிலைமையில் தான் இலங்கையும் தவிக்கிறது. இலங்கை அணி தனது முதல் ஆட்டத்தில் தென்ஆப்பிரிக்காவுக்கு எதிராக 428 ரன்களை விட்டுக்கொடுத்து தோற்றது. அடுத்த ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக 344 ரன்கள் குவித்தும் 6 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இலங்கை அணியில் பேட்டிங் நன்றாக உள்ளது. ஆனால் பவுலர்கள் தான் சொதப்புகிறார்கள். இரு ஆட்டத்தையும் சேர்த்து 773 ரன்களை வாரி வழங்கியுள்ளனர். பதிரானா, வெல்லாலகேவின் பந்துவீச்சு எடுபடவில்லை. பவுலர்கள் முந்தைய தவறுக்கு பரிகாரம் தேட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

கேப்டன் தசுன் ஷனகா தொடையில் ஏற்பட்ட காயத்தால் உலகக் கோப்பை போட்டியில் இருந்து விலகியுள்ளார். இதனால் அவருக்கு பதிலாக குசல் மெண்டிஸ் அணியை வழிநடத்துவார்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டில் இவ்விரு அணிகள் இதுவரை 102 ஆட்டங்களில் நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் 63ல் ஆஸ்திரேலியாவும், 35ல் இலங்கையும் வெற்றி பெற்றன. 4 ஆட்டத்தில் முடிவில்லை.

உலகக் கோப்பையில் இவ்விரு அணிகளும் சந்தித்த 10 ஆட்டங்களில் ஆஸ்திரேலியா 8 ஆட்டத்திலும், இலங்கை ஒரு ஆட்டத்திலும் வெற்றி பெற்றன. மற்றொரு ஆட்டத்தில் முடிவில்லை. இலங்கை அணி ஆஸ்திரேலியாவை 1996ம் ஆண்டு இறுதி ஆட்டத்தில் மட்டும் தோற்கடித்து இருந்தது. உலகக் கோப்பையில் 27 ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியாமல் போராடும் இலங்கை அந்த சோகத்துக்கு முடிவு கட்டுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

போட்டிக்கான இரு அணிகளின் உத்தேச பட்டியல் வருமாறு: ஆஸ்திரேலியா: வார்னர், மிட்செல் மார்ஷ், ஸ்டீவன் சுமித், லபுஸ்சேன், ஜோஷ் இங்லிஸ், கிளென் மேக்ஸ்வெல், மார்கஸ் ஸ்டோனிஸ், மிட்செல் ஸ்டார்க், கம்மின்ஸ் (கேப்டன்), ஆடம் ஜம்பா, ஹேசில்வுட். இலங்கை: பதும் நிசாங்கா, குசல் பெரேரா, குசல் மெண்டிஸ் (கேப்டன்), சமரவிக்ரமா, சாரித் அசலங்கா, தனஞ்ஜெயா டி சில்வா, துனித் வெல்லாலகே, சமிகா கருணாரத்னே, தீக்‌ஷனா, கசுன் ரஜிதா, மதுஷன்கா.




## மெர்டேக்கா கால்பந்து தொடர்; அரையிறுதியில் இந்திய அணி தோல்வி..!

42வது மெர்டேக்கா கால்பந்து தொடர் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறுகிறது. இந்த தொடரில் முதலில் மலேசியா, இந்தியா, பாலஸ்தீனம் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய 4 அணிகள் இடம் பெற்றிருந்தன. இதில் தொடரில் இருந்து கடைசி நேரத்தில் பாலஸ்தீனம் விலகியது.

பாலஸ்தீனம் விலகிய நிலையில், மலேசியா கால்பந்து சங்கம், இந்த தொடர் இந்தியா, தஜிகிஸ்தான் மற்றும் மலேசியா ஆகிய மூன்று அணிகளுடன் நாக் அவுட் முறையில் நடைபெறும் என்று அறிவித்து இருந்தது.

அதன்படி நடைபெற்ற அரையிறுதியில் இந்தியா மற்றும் மலேசியா அணிகள் மோதின. இதில் மலேசியா 42 என்ற கோல் கணக்கில் இந்திய அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ள இறுதிப்போட்டிக்கு மலேசிய அணி தகுதி பெற்றுள்ளது.

இறுதிப்போட்டியில் மலேசியா மற்றும் தஜிகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

## ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ்: இறுதிப்போட்டியில் போபண்ணா ஜோடி தோல்வி

ஷாங்காய் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி சீனாவில் நடந்து வந்தது. இதில் நேற்று நடந்த ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் போலந்து வீரர் ஹூபெர்ட் ஹர்காக்ஸ் 63, 36, 76 (8) என்ற செட் கணக்கில் ரஷியாவின் ஆந்த்ரே ரூப்லெவை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். 2 மணி 6 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் 21 ஏஸ் சர்வீஸ்களை வீசியது அவரது வெற்றிக்கு பக்கபலமாக இருந்தது.

தரவரிசையில் 16வது இடத்தில் உள்ள ஹர்காக்ஸ் ஆயிரம் தரவரிசை புள்ளிகளை வழங்கும் இத்தகைய மாஸ்டர்ஸ் கோப்பையை வெல்வது இது 2வது முறையாகும். ஏற்கனவே 2021ம் ஆண்டில் மியாமி மாஸ்டர்ஸ் டென்னிசில் மகுடம் சூடி இருந்தார். அவருக்கு ரூ.$10\frac{1}{2}$ கோடி பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. இதன் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரோகன் போபண்ணா ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டென் ஜோடி 75, 26, 710 என்ற செட் கணக்கில் மார்செல் கிரானோலர்ஸ் (ஸ்பெயின்) ஹோராசியோ ஸிபல்லாஸ் (அர்ஜென்டினா) இணையிடம் போராடி தோற்றது. கிரோனோலர்ஸ் ஜோடிக்கு ரூ.$3\frac{1}{2}$ கோடியும், போபண்ணா இணைக்கு சுமார் ரூ.2 கோடியும் பரிசுத்தொகையாக கிடைத்தது தோல்வி அடைந்தாலும் இறுதிப்போட்டிக்கு முன்னேறியதன் மூலம் போபண்ணா எப்டென் கூட்டணி டாப் 8 ஜோடிகள் மட்டுமே கலந்து கொள்ளும் உலக ஏ.டி.பி. டூர் இறுதிசுற்றுக்கு தகுதி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.